Registered as a Newspaper in Ceylon

# ஈழநாடு

EELA N DU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி 49

ஊர் 6 யாழ்ப்பாணம் குரோதி கார்த்திகை 20 ஆம் நாள் றஜபு பிறை 30 5 12-64 சனிக்கிழமை 296

விலை சதம் 10



30 வருட நற்சேவையினுல் மக்களின்
அமோக ஆதரவை பெற்றவர்
எம். எஸ். எம். ஜுனைட்
(மூக்குக்கண்ணுடி தயாரிப்பாளர்)
144, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

# பார்லிமெண்டை கலைக்க பிரதமர் சிபார்சு!

## டிச. 17-ந் திகதி கலைக்கப்படலாம்

### பொதுத்தேர்தலில் பிரதமரும் போட்டியிடுவார்

கொழும்பு, வெள்ளி

இலங்கையின் 5வது பார்லிமெண்டைக் கலைக்கும்படி பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, கவர்ணர்ஜெனரலிடம் சிபார்சு செய்யத் தீர்மானித்துள்ளார்.

நேற்றிரவு பார்லிமெண்டில் சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை தோல்வியடைந்ததை தொடர்ந்து; பார்லிமெண்டை கலைக்க கவர்னர் ஜெனரலிடம் சிபார்சு செய்ய தான் தீர்மானித்துள்ளதாக பிரதமர் இன்றிரவு 10-30 மணிக்கு நாட்டு மக்களுக்கு வானொலி மூலம் விடுத்த செய்தியில் தெரிவித்தார்.

பார்லிமெண்ட் கலைக்கப்பட்டதும், புதிய தேர்தலுக்கான திகதியும், அதற்கான நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும் திகதியும், புதிய பார்லிமெண்ட் கூடும் திகதியும விரைவில் அறிவிக்கப்படுமென பிரதமர் தெரிவித்தார்.

இன்று பார்லிமெண்ட் கூடியபோது சபாநாயகர் சபையை 17-ம் திகதி வரை ஒத்திவைத்தார். பிரதமரின் சிபார்சின் பெயரால் கவர்ணர் ஜெனரல் பார்லிமெண்டை 17-ம் திகதி கலைக்கலாம் என நம்பப்படுகிறது.

பிரதம மந்திரி தான் தேர்தலில் போட்டியிடுவார் எனவும், மக்கள் தங்கள் விருப்பப்படி - ஜனநாயக ரீதியில் ஆட்சியாளரை தெரிவு செய்ய வேண்டும் என்ற நோக்குடனேயே பார்லிமெண்டை கலைக்குமாறு சிபார்சு செய்யவிருப்பதாகவும் தெரிவித்தார்.

## பாராளுமன்றத்துக்கு வெளியே பயங்கர கைகலப்பு!

### கோபாவேஷங் கொண்ட கூட்டத்தினர் கார்கள் மீது கல் வீசினர்

### சி. பி. டி'யை காப்பாற்ற சபாநாயகர் பொலிசாரை அழைத்தார்

கொழும்பு, வெள்ளி

பாராளுமன்றம் இன்று பிற்பகல் 2 மணிக்கு கூடியபொழுது, சிம்மாசனப் பிரசங்கத்திற்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணையை திருத்த பிரேரணையுடன், கவர்னர் ஜெனரல் ஏற்றுக் கொண்டதாக சபாநாயகர் தெரிவித்தார் ஏற்றுக் கொண்ட திருத்தப் பிரேரணையில் அரசாங்கத்தில் மக்களுக்கு நம்பிக்கையில்லை என்ற திருத்தப் பிரேரணையும் அடங்கியுள்ளது.

(6-ம் பக்கம் பார்க்க)

## பிரதமரின் வானொலி அறிக்கை

பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா இன்று இரவு 10-30 மணியளவில் வானொலி மூலம் மக்களுக்கு விடுத்த செய்தியில் தெரிவித்ததாவது:

"நேற்று நடந்த நிகழ்ச்சியின் பின்னர், தற்போது உள்ள சூழ்நிலையை பார்லிமெண்டை கலைக்கவேண்டுமென நான் கவர்னர் ஜெனரலிடம் தெரிவிக்கவுள்ளேன். மக்கள் ஜனநாயக முறையில் தங்களுக்கு விரும்பியவர்களை ஆட்சிக்கு அனுப்பவேண்டும் என்பதற்காகவே நான் இவ்விதம் முடிவு செய்தேன்.

மிகவும் இரகசியமாக இருந்துவிட்டு மந்திரிசபையை விட்டு வெளியேறிய திரு. சி. பி. டி' சில்வாவின் செய்கை எனக்கு அதிர்ச்சியை கொடுத்துள்ளது. இவரின் இச்செய்கை முதுகில் குத்துவது போன்ற ஒன்றாகும்.

பௌத்தத்துக்கு உரிய இடம் அளிக்கப்படும், எனவும் பத்திரிகை மசோதாக்கள் சமர்ப்பிக்கப்படும் எனவுமே சிம்மாசன பிரசங்கத்தில் தெரிவிக்கப்பட்டது. இதை எதிர்த்தே திரு. டி' சில்வா வாக்களித்துள்ளார். நான் வெளிநாடு சென்றிருந்த சமயம் திரு. சில்வா நாட்டின் தற்காலிக தலைவராக இருந்தபோதே முதலில் பத்திரிகை மசோதாக்கள் சமர்ப்பிக்கப்பட்டன. அந்த மசோதாக்கள் சபையின் ஒழுங்கு விதிகளுக்கமைய சமர்ப்பிக்கப்படுவதை அவர் பார்த்திருக்க வேண்டும். அவை உரிய முறையில் சமர்ப்பிக்கப்படும் என்றே நான் எதிர்பார்த்தேன். பத்திரிகை மசோதாக்களை ஆதரித்துவிட்டு திரு. சி. பி. டி' சில்வா இப்படியான சூழ்நிலை

(6-ம் பக்கம் பார்க்க)

## கடைசி நேரத்திலும் காலதாமதம்

கொழும்பு, வெள்ளி

நாட்டு மக்களுக்கு இலங்கை வானொலி மூலம், பிரதமர் சிறிமா பண்டாரநாயக்கா, இரவு 7 மணிக்கு ஒரு விசேஷ செய்தி வெளியிடுவார் என அறிவிக்கப்பட்டது.

அச்செய்தி 7 மணிக்கு வெளியிடப்படமாட்டாதென்றும் 9-15 மணிக்கு வெளியிடப்படுமென்றும் பின் அறிவிக்கப்பட்டது. பின்னர் 10 மணிக்கு வெளியிடப்படுமென்றும், பின்னர் 10-15 மணிக்கு வெளியிடப்படுமெனவும் அறிவிக்கப்பட்டது.

ஆனாலும் 10-25 மணி வரை அச்செய்தி வெளியிடப்படவில்லை. இறுதியாக 10-30 மணிக்கு பிரதமர் தமது உரையை நிகழ்த்தினர். சுமார் 10 நிமிடங்கள் அவர் பேசினர்.

## பார்லிமெண்ட்முன் பத்திரிகைகள் தீக்கிரை

கொழும்பு, வெள்ளி

பாராளுமன்றத்திற்கு எதிரிலுள்ள சதுக்கத்தில் கோபாவேசம் கொண்ட ஒரு கூட்டத்தினர், ஏராளமான பத்திரிகைகளை கொளுத்தினர்கள்.

ஏரிக்கரை பத்திரிகைகளை அரசாங்கம் எடுக்கத் தவறினால், இக்கூட்டு மக்கள் அப்பத்திரிகைகளை எடுப்பார்கள் என அக்கூட்டத்தினர் கூறினர்கள்.

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
திறமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்
எம்மிடம்
பெற்றுக் கொள்ளலாம்.
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

## மணிவாக்கு

அச்சமற்றவரை அணுக்குண்டு என்ன செய்ய முடியும்? சிறு அணுகுண்டு வெடித்தால் அதற்குப் பதில் கூறும் முறையில் நாம் எல்லா ஆயுதங்களையுமே கைவிட்டு விடலாமே என்ற எண்ணம் எனக்குத் தோன்றியது.

—வினோபாஜி.

ஈழநாடு
EELA NADU

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு கார்த்திகை மீ 20 உ (5-12-64)

## இலங்கை அரசியல் நெருக்கடி

சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும்பிரேரணை ஒரே ஒரு வாக்கினால் தோல்வி அடையுமென்று பிரதமர் ஸ்ரீமாவும் அரசு ஆதரவாளரும் சற்றும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேரா இங்கு இருந்திருப்பின் இவ்வித நிலை ஏற்பட்டிருக்காதென்றும் அவர்கள் வாதிக்கலாம். அசைக்க முடியாத மெஜாரிட்டிபலம் தங்களுக்கு இருக்கிறதென்ற நம்பிக்கையிலேயே சென்ற பார்லிமெண்ட்சபை கூட்டத் தொடரைக் கலைத்து மற்றொரு சிம்மாசனப் பிரசங்கத்துக்கு ஏற்பாடு செய்து பத்திரிகை மசோதாக்களை மீண்டும் கொண்டுவந்தார்கள்.

ஆனால் சற்றும் எதிர்பாராதபடி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள்ளாகவே பிளவு ஏற்பட்டது. திரு. ஸி. பி. டி. சில்வா உள்ளிட்டு 13 பேர் எதிர்க்கட்சிக்கு மாறினர். நியமன மெம்பரில் ஒருவர் எதிர்த்து வாக்களித்தார். ஒருவர் நடுநிலைமை வகித்தார். மற்றொரு எம். பி. ஒருவழக்கு சம்பந்தமாக காவலில் இருக்கின்றார். இதனால் அரசாங்கக் கட்சி பலவீனமடைந்து நன்றி தெரிவிக்கும் பிரேரணையும் நிராகரிக்கப்பட்டது. தங்கள் கட்சியில் சிலரே நம்பிக்கை மோசம் செய்துவிட்டதாகவும் அரசாங்கக்கட்சி குற்றம் சுமத்தலாம். இது எப்படியாயினும் தோல்வி தோல்விதான். பிறர் மீது குற்றம் சுமத்துவதை விட்டு தங்கள் தவறை உணர்ந்து அதைத் திருத்திக்கொள்வது தான் அறிவுடைமையாகும்

அரசாங்கக் கட்சி தோல்வி அடைந்தால், இங்கு அவசரகால பிரகடனம் செய்யப்படுவதுடன் இனி தேர்தலே நடைபெறுதென்றும், சர்வாதிகார ஆட்சி ஏற்படுமென்றும் சில அரசியல் வாதிகள் பிரசாரம் செய்தனர். அப்படியின்றி பார்லிமெண்டைக் கலைத்து பொதுத் தேர்தல் நடத்த விசேஷ மந்திரி சபைக் கூட்டம் தீர்மானித்துள்ளது வரவேற்கத்தக்கதாகும். இங்கு ஜனநாயகத்துக்கு இன்னும் இடமிருக்கிறதென்ற நம்பிக்கையை இது அளிப்பதாக உள்ளது.

இலங்கை சுதந்திர மடைந்தபின் 7 வருட காலமாக இங்கு ஜனநாயக ஆட்சி பலப்படமுடியாமல் ஸ்திரமற்றிருப்பதை எல்லா அரசியல் கட்சிகளும் உணர்ந்து அதற்கான காரணத்தை ஆராயவேண்டும். எட்டு வருட காலம் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிபுரிந்தது. பின்னர் எட்டு வருடகாலம் சுதந்திரக்கட்சி, என்றாலும் நாட்டிலே ஒற்றுமையும் அமைதியும் பலப்படுவதற்கு பதில், இவை குலைந்துள்ளன. சிறப்பாக தமிழ் பேசும் மக்கள் பல உரிமைகளுமிழந்து திகைப்படைந்து, இந்த ஜனநாயக ஆட்சிமுறையிலேயே நம்பிக்கை இழந்துள்ளனர். முன்னர் தாங்கள் ஆதரித்த ஐக்கிய தேசியக் கட்சியும் தங்களைக் கைவிட்டது. பின்னர் சுதந்திரக்கட்சியை ஆதரித்ததில் அதுவும் அவ்வழியே சென்றது. இந்நிலையில் தமிழ் பேசும் மக்கள் பெரும் ஏமாற்றமடைந்து இனி யார் ஆட்சிக்கு வந்தால் என்ன என்று மனமுடைந்த நிலையில் இருக்கின்றனர்.

இந்நிலையில் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் என்ன செய்ய வேண்டுமென்பதே கேள்வி. இந்த வாக்கெடுப்பில் பல கட்சிகளையும் சேர்ந்த தமிழ் பிரதிநிதிகளும், பிரேரணைக்கு மாறாக ஒற்றுமையாக வாக்களித்துள்ளனர். அவர்களது ஆதரவைப் பெற்றிருந்தால், இதே கதி அரசாங்கத்துக்கு ஏற்பட்டிராது. சென்ற முறை ஐ. தே. கட்சியும் தமிழரின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெறத்தவறியதால் தான் அரசியல் அதிகாரத்தை இழக்கநேரிட்டது. தமிழருக்கும் இது நல்லதோர் பாடமாகும்.

தங்களது விமோசனம் தங்கள் கையில் தான் உள்ளதென்பதை உணர்ந்து புதிய ஒற்றுமையுடன் காரியம் செய்ய வேண்டும். பழைய அனுபவங்களை மறக்காமல், பழைய தவறுகளைத் திருத்திக்கொள்ள வேண்டும். இதே சமயம் மற்ற அரசியல் கட்சிகளும் குறுகிய வகுப்புவாதங்களைவிட்டு மனித உரிமை தேசிய ஒற்றுமை இவற்றைக் கருதி மேலான அரசியல் ஞானத்துடன் நடப்பின் இந்த அரசியல் நெருக்கடியும் நல்ல எச்சரிக்கையாக இருந்து நன்மையில் முடியக்கூடும் இனி என்ன நடக்கிறதோ பொறுத்துப் பார்ப்போம்.

## புகையிரதப் பொருட்காட்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

பொருட்காட்சி புகையிரதம் இம்மாதம் 18-ம், 19-ம் தேதிகளில் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் பொதுமக்கள் பார்வையிடுவதற்காக நிறுத்தப்படும். காலை 8 மணி முதல் இரவு 10 மணிவரை பொருட்காட்சி திறந்துவைக்கப்படும்.

## சேவை நலம் பாராட்டு

உடுப்பிட்டி, வெள்ளி

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சுங்க இலாகா உத்தியோகத்தர் திரு. இராஜாகங்கின் சேவைநலம் பாராட்டுமுகமாக செல்வியடி ரிக்கிரியேஷன் கிளப்பினரால் ஒரு வரவேற்பு வைபவம் நடாத்தப்பட்டது. இக்கூட்டத்திற்கு திரு க. இராஜேந்திரம் தலைமைவகித்தார்.

# கூட்டு அரசாங்கத்தின் துரதிருஷ்டம்

## டில்லி ஒப்பந்தத்தின் கதி என்ன?

### — நமது அரசியல் நிருபர் —

இலங்கைஜனப்பிரதிநிதிகள் சபையில் மொத்த மெம்பர்கள் 157. இதில் அரசாங்கத்துக்குச் சாதகமாக 73 பேரும், பாதகமாக 74 பேரும் வாக்களித்தனர். 147 பேரே வாக்களிப்பில் கலந்துகொண்டனர். மற்ற பத்துப் பேர்களின் நிலை என்ன?

நியமனமெம்பரான தொண்டமான் வாக்களிக்கவில்லை. யாழ்ப்பாண பிரதிநிதி துரையப்பா சபைக்கே வராமல் இருந்துவிட்டாராம் மற்றஎட்டு பேரில் ஒருவர் தலைவர். நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேரா லண்டனில் சிகிச்சை பெற்றுவருகிறார். பிரிவு மெம்பரும் சுதந்திரக்கட்சியைச் சேர்ந்தவருமான டி. எம். குணசேகரா ஒரு வழக்குச்சம்பந்தமாக காவலில் இருக்கின்றார்.

களனி தொகுதி பிரதிநிதியும் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவருமான அப்துல் ஜபார் காலமாகி, அங்கு இடைத்தேர்தல் நடைபெறவேண்டியுளது. கூட்டு அரசாங்க ஆதரவாளரான பெர்ஸிவல் சொய்ஸா, டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா இவ்விருவரும் வெளிநாடுகளிலுள்ளனர். மற்றுமிரு நியமன மெம்பர்களும் வரவில்லை. அவர்களெல்லாம் வந்திருப்பின் கூட்டு அரசாங்கம் இப்படித் தோற்றிராது.

கூட்டு அரசாங்கத்துக்கு இந்நிலையிலும் கூட உண்மையில் போதிய மெஜாரிட்டிப்பலமிருந்தும், அது தோற்க நேரிட்டது அதன் துரதிஷ்டமே வராதவர்கள் அனைவரும் அரசாங்கத்தை ஆதரிப்பவர்களே. எதிர்க்கட்சியினர் அனைவரும் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

∴ ∴ ∴

அரசாங்கம் தோல்வி அடைந்ததால் டில்லி ஒப்பந்தத்தின் கதி என்ன ஆகும்? இக்கிய அரசாங்கப் பிரதிநிதிகள் இனி வருவார்களா? அல்லது பொதுத்தேர்தலுக்குப் பின்னரே இதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படுமா? என்பன முக்கிய கேள்விகள்.

சென்ற பொதுத் தேர்தலின் மலைநாட்டிலே தமிழ் வாக்குகள் பெரிதும் சுதந்திரக்கட்சிக்கே கிடைத்தன. அதனால் பல தொகுதிகளில் அக்கட்சியினர் வெல்ல முடிந்தது. ஆனால் இப்போது, தொண்டமானை ஒரு மந்திரியே பகிரங்கக்கூட்டத்தில் தாக்கிப் பேசியுள்ளார். இந்தியரை தனித்தொகுதியில் ஒதுக்குவதின் மூலம் இனி இந்தியர் வாக்கு சுதந்திரக் கட்சிக்குக் கிடைப்பது சந்தேகம். அப்படியாயின் தமிழ் வாக்குகள் யு என் பி. கட்சிக்குக் கிடைக்குமா? யு. என். பி யின் மனப்பான்மையில் மாறுதல் ஏற்படுமா? டில்லி ஒப்பந்தத்திலே டட்லியின் சம்மதத்தைப்பெற்றே ஸ்ரீமா கையொப்பமிட்டுள்ளார் ஆகவே அவ்வொப்பந்தம் பற்றி அவர்களிடை கருத்து வேற்றுமை இருக்கமுடியாது.

ஆனால் தொண்டமானை பல கட்சிகளும் தாக்கிப் பேசுவதால், அடுத்த பொதுத் தேர்தலில் இந்திய துவேஷம் மீண்டும் தலைதூக்கக்கூடும்.

மொழி விஷயத்தில் தமிழருக்கு விட்டுக்கொடுத்து விட்டதாக கூட்டு அரசாங்கத்தை வெளிப்படையாக் தாக்கிவருகிறார். பிலிப்பும், கே. எம். பியும் ஒன்று சேர்ந்துள்ளனர். ஆர். ஜி சுதந்திரக் கட்சியை ஆதரிக்கிறார், ஆகவே இந்திய துவேஷம், தமிழ் துவேஷம் முதலிய பல்லவிகள் மீண்டும் கிளம்பக்கூடும்.

கலவரங்கள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டிய பெரும் பொறுப்பு பக்தோபஸ்து மந்திரி சபைக்கு உண்டு.

## கைத்தொழில் சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட கைத்தொழில் சுவீப் முடிவுகள் வருமாறு:

**முதலாவது பரிசு**

03 X 0185 ரூபா 33, 500

**இரண்டாவது பரிசு**

17 L 0915 ரூபா 9,500

**மூன்றாவது பரிசு**

02 P 0294 ரூபா 4,610

தலை ரூபா 500 பெறும் டிக்கட்டுகள்:

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 14 | C | 0138 | 18 | H | 0658 | 19 | X | 0164 |
| 01 | X | 0781 | 19 | Q | 0514 | 01 | L | 0224 |
| 01 | U | 0888 | 13 | H | 0289 | 10 | B | 0957 |
| 15 | Q | 0773 | 03 | U | 0955 | 12 | Y | 0804 |
| 16 | C | 0454 | 16 | X | 0095 | 15 | S | 0503 |
| 08 | S | 0574 | 11 | V | 0.33 | 13 | R | 0910 |
| 11 | D | 0029 | 17 | W | 0877 | 11 | I | 0528 |
| 06 | V | 0131 | 13 | A | 0382 | 02 | E | 0521 |
| 09 | A | 0673 | 08 | T | 0359 | 02 | B | 0120 |
| 16 | V | 0154 | 21 | M | 0504 | 20 | A | 0271 |
| 14 | Y | 0022 | 11 | V | 0743 | 13 | G | 0444 |
| 09 | B | 0923 | 16 | B | 0299 | 03 | X | 0661 |
| 20 | J | 0606 | 08 | H | 0792 | 06 | Q | 0533 |
| 08 | A | 0586 | 03 | G | 0210 | 10 | T | 0406 |
| 20 | X | 0576 | 06 | L | 0335 | 09 | J | 0790 |
| 06 | F | 0706 | 15 | D | 0217 | 14 | W | 0251 |
| 18 | S | 0992 | 12 | I | 0720 | 20 | Y | 0549 |
| 07 | A | 0084 | 16 | R | 0100 | 13 | H | 0731 |
| 10 | R | 0468 | 12 | D | 0537 | 16 | P | 0210 |
| 09 | K | 0170 | 14 | Z | 0207 | 05 | I | 0594 |
| 18 | E | 0101 | 17 | J | 0712 | 10 | T | 0317 |
| 02 | L | 0547 | 17 | X | 0193 | 17 | T | 0164 |
| 04 | W | 0003 | 05 | J | 0526 | 01 | M | 0051 |
| 04 | X | 0013 | 03 | C | 044[illegible] | 16 | G | 0224 |
| 04 | C | 0607 | 07 | B | 0790 | 05 | U | 07[illegible]5 |
| 16 | W | 0850 | 19 | X | 0556 | 19 | Q | 0133 |
| 22 | P | 0393 | 07 | R | 0[illegible]6 | 10 | K | 0[illegible]35 |
| 04 | B | 0289 | 07 | B | 0136 | 05 | G | 0966 |
| 17 | Z | 0092 | 10 | D | 0440 | 05 | G | 0674 |
| 13 | G | 0914 | 19 | D | 0[illegible]31 | 06 | B | 0594 |
| 19 | B | 0031 | 08 | W | 0159 | 17 | F | 0181 |
| 08 | T | 0212 | 15 | L | 0407 | 16 | U | 0253 |
| 12 | Q | 0218 | 01 | G | 0136 | 04 | D | 0011 |

20 P 0316

தலை 250 ரூபா பெறும் 24 டிக்கட்டுகள் வருமாறு:

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 03 | A | 0185 | 03 | R | 0185 | 03 | J | 0185 |
| 03 | C | 0185 | 03 | T | 0185 | 03 | L | 0185 |
| 03 | E | 0185 | 03 | V | 0185 | 03 | N | 0185 |
| 03 | G | 0185 | 03 | Y | 0185 | 03 | Q | 0185 |
| 03 | I | 0185 | 03 | B | 0185 | 03 | S | 0185 |
| 03 | K | 0185 | 03 | D | 0185 | 03 | U | 0185 |
| 03 | M | 0185 | 03 | F | 0185 | 03 | W | 0185 |
| 03 | P | 0185 | 03 | H | 0185 | 03 | Z | 0185 |

(5-ம் கலத் தொடர்ச்சி)

யப்பா என்ன, கூட்டம்! உட்காரவும் இடமில்லை. இந்த நல்ல படத்துக்கு யாழ்ப்பாணத்தில் இவ்வளவு ஆதரவு இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இங்கு பொது மக்களின் மனம் மேலாக இருப்பதற்கு இது அறிகுறியாகும். கொழும்பிலே இவ்வளவு ஆதரவில்லை.

"காதற்ற ஊசியும் வாராது காணுங் கடைவழிக்கே" என்ற வாசகத்தைத் தம் மனதில் இன்னும் வேலை செய்வதாக ஓர் அன்பர் தெரிவிக்கிறார். தமிழ் நாட்டில் உள்ள பல கோவில்களையும் இப்படம்மூலம் தரிசிக்க முடிகிறது.

இப்படம் பலரையும் சிந்திக்க வைத்து, வாழ்க்கையைத் தூய்மைப்படுத்தக் கூடியதாகும். மீண்டும் பார்க்க வேண்டும் போலுள்ளது. பார்க்காதவர்கள் அவசியம் பார்க்க வேண்டுமென்று சிபார்சு செய்கிறேன்.

* * *

கருமருவு வல்வினை நோய் அறுத்திடுவான் காண் காமரு பூங்கச்சியே கம்பத்தான் காண், பெருமருவு மலைமகளின் பிணிகள் தீர்க்கும் பெரும் பற்றத்தண் புலியூர் மன்றுடி காண், கருமருவு கொடைத் தடக்கை யானைக்கோன்றன் சங்கரதி அருளல் தனியானைக் காண் திருமருவு பொழில் புடைசூழ் திருப்புகலி நில் திருத்தனியானைக் காண் அவனென் சிந்தையானே.

— அப்பர் சுவாமிகள்

## ஐயாறன் எழுதுவது

நேற்று பல அன்பர்கள் டெலிபோன் செய்து 'ஈழநாடு' பத்திரிகையைப் பாராட்டினார்கள். அரசாங்கத்தின் தோல்வி பொதுத் தேர்தல் நடத்தத் தீர்மானம் முதலிய கொழும்புச் செய்திகளை வேறு எந்தப் பத்திரிகையும் அளிக்கவில்லை என்றும் 'ஈழநாடு' மூலமே தாங்கள் உடக்குடன் அறிய முடிந்ததென்றும், 'ஈழநாடு' வாழ்க என்றும் வாழ்த்தினர். உருவில் சின்னதாயினும் 'ஈழநாடு' செய்யும் சேவையை இங்கு மக்கள் மெதுவாக உணர்ந்து வருவது மகிழ்ச்சியளிக்கின்றது.

ஒரு பிரபல வர்த்தக அன்பர் விசேஷமாகப் பாராட்டினார். ஆனால் அவர் தமது விளம்பரங்களையெல்லாம் கொழும்பு பத்திரிகைகளுக்குத்தான் அளிக்கின்றார். இங்கு வர்த்தக அன்பர்கள், தங்கள் அபிமான பத்திரிகையான 'ஈழநாடு' மூலம் வியாபார விளம்பரங்கள் செய்வதால், அவர்களது வர்த்தகம் செழிப்பதுடன், அவர்களது பத்திரிகையான 'ஈழநாடு'ம் பலப்பட்டு மேலும் அதிகசேவையை நன்கு செய்ய முடியும். வரவர ஆதரவு அதிகரித்து வருகிறதெனினும், இன்னும் ஆதரவு அதிகம் தேவைப்படுவதால் தான் இதை இங்கு குறிப்பிடலானேன்.

* * *

நேற்று இரவெல்லாம் சிவராத்திரிதான். நான்கு பதிப்புகள் வெளியிட்டோம். கொழும்பிலே நடக்கும் இந்த ருசியான அரசியல் நாடகத்தை அவ்வப்போது டெலிபோனில் அறிந்து இங்கு மக்களுக்கு அறிவித்தோம். 'டெலிபிரிண்டர்' முதலிய நவீன வசதிகள் இருப்பின் இன்னும் எவ்வளவோ மேலாக இருக்கும். இந்தியாவிலே சிறிய பத்திரிகைகளுக்கு விசேஷ உதவியும் ஆதரவுமளிக்க அரசாங்கம் முன்வந்து ஒரு விசாரணைக்கமிஷனையும் நியமித்துள்ளது. ஆனால் இங்கோ பத்திரிகைகளை அரசாங்கம் தனது எதிரிகளாக மதிக்கின்றது! ஆசிரியர்களை ஒருமுறையாவது பிரதமமந்திரி அழைத்துப் பேச முன்வரவில்லை. இது பெரிய தவறு எவ்வளவு தப்பபிப்பிராயங்களும் நேரில் கலந்து அடிக்கடி பேசினால் நீங்கி நல்லுறவு ஏற்படும். அவ்விதம் செய்யாத தோஷமே, இன்று அரசாங்கம் தோற்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. பாவம்!

* * *

இந்தக் கூட்டு அரசாங்கம் தோற்ற செய்தியைக் கேட்டு, ஓரன்பர், இது இலங்கைக்குத் தீங்காகுமென்றார் ஏன் என்று கேட்டதற்கு, மீண்டும் முதலாளிவர்க்க தலைதூக்குமென்றும், அந்த ஆட்சியில் பல தீங்குகள் ஏற்படலாமென்றும், அச்சம் தெரிவித்தார். மற்றும் சிலர் இந்தச் செய்தியைக் கேட்டதும், கைகூப்பி கடவுளுக்கு நன்றி தெரிவித்தனர். ஏன் என்று கேட்டதற்கு, இனி ஏதாவது மாறுதல் வரலாம் என்ற நம்பிக்கையால்தான் என்றார்.

பிறரை நம்பி இருப்பதைவிட, நமது தலைவிதி நமலம்தான் பெரிதும் பொறுத்துள்ளது. இவ்வளவு சோதனைகள் ஏற்பட்ட பின்னாவது, நமது தலைவர்கள் பரஸ்பரம் விட்டுக்கொடுத்து ஒற்றுமைப்படுவார்களா? தமிழ் பொது மக்கள் ஒற்றுமைக்கு ஆவல்தான், ஆனால் தலைவர்கள்!

* * *

யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ள 'பட்டினத்தாரை' நீங்கள் தரிசித்தீர்களா? பல அன்பர்கள் பார்க்கும்படி கூறியதின் மீது முந்தாநாள் சென்று பார்த்தேன் அடே

(5-ம் கலம் பார்க்க)

# தமிழ் எழுத்தாளர்களின் 12ம் மகாநாடு
## இன்று சென்னையில் ஆரம்பம்

சென்னை, டிச 5

தமிழ் எழுத்தாளர் பன்னிரண்டாவது மகாநாடு இன்று கோகலே மண்டபத்தில் சங்கத் தலைவர் உயர்திரு மயிலை சீனி வேங்கடசாமி தலைமையில் நடைபெறுகிறது.

விந்தியப்பிரதேச முன்னாள் கவர்னரும், புகழ்பெற்ற எழுத்தாளருமான உயர்திரு க. சந்தானம் மகாநாட்டை துவக்கி வைக்கிறார்.

அவ்வமயம் சீரிய இலக்கியங்களைப் படைத்து தமிழுக்கு ஆக்கம் தேடித்தந்துள்ள திருவாளர்கள் தமிழ்க்கடல் ராய. சொக்கலிங்கம், நாரண. துரைக்கண்ணன் ஆகியோருக்கு கேடயங்களும், தமிழ் இலக்கியச் செல்வங்களை வேற்று மொழி மக்களுக்கு அறிமுகம் செய்துள்ள திருவாளர்கள் தே. எம் சோமசுந்தரம், செமியோன் ருடின் (ருஷ்ய நாட்டவர்) ஆகியோருக்கு பதக்கங்களும் சங்கச் சார்பில் வழங்கிச் சிறப்பிக்கச் சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி உயர்திரு மா. அனந்தநாராயண் ஐ. சி. எஸ். இசைந்துள்ளார்.

திரு. கி. வா. ஜகந்நாதன் தலைமையில் நாட்டுப் பாடல் இசை அரங்கு நிகழ்கிறது. ஆறு இந்திய மொழி இசைவாணர்கள் பாடுகிறார்கள்.

கவியோகி சுத்தானந்தபாரதியார் தலைமையில் "உலக மகாகவிஞன்" எனும் கருத்தரங்கு நடைபெறுகிறது. இதில் பல அறிஞர்கள் பேசுகிறார்கள்.

"இலக்கியம் பலவிதம்" என்னும் தலைப்பில் ஓர் உரைக்கோவை நிகழ்கிறது. இதில் எழுத்தாளர்கள் பலர் உரையாற்றுகின்றனர்.

# 4 கார்கள்; 4 கட்டிடங்கள்
## கோர்ட்டில் நடிகை பதில்

பம்பாய், டிச. 4

தனக்கும், தன் கணவருக்கும் சொந்தமாக ஒரு ஓர்க்கண்டினன் கார் உட்பட, நான்கு கார்களும், பல அடுக்கு மாடிக்கட்டிடங்கள் நான்கும் இருப்பதாக ஹிந்தி நடிகை நூதன் பம்பாய் மாகாண மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் தெரிவித்தார்.

கள்ளக் கையெழுத்திட்டு 'சோபனா பிக்சர்ஸ்' சொத்துக்களை களவாடியுள்ளதாகத் தன் தாயார் சோபனா சமர்த் மீது நடிகை நூதன் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்.

கணவனது சம்பளம் எவ்வளவென்பது உங்களுக்குத் தெரியுமாவென எதிர்க்கட்சி வக்கீல் கேட்டபோது தெரியாதென நூதன் பதிலளித்தார்.

கார்களையும், வீடுகளையும் வாங்க எங்கிருந்து கணவனுக்குப் பணம் கிடைத்ததென்ற கேள்விக்கும் தெரியாதென்றார் நூதன்.

## பண்டா பாராட்டு

நியூயார்க், டிச 4

நேற்று ஐ. நா. பொதுச்சபையில் பேசிய மலவி பிரதமர் டாக்டர் பண்டா, சீனாவின் அணுகுண்டு சோதனையை வன்மையாகக் கண்டித்து அணுகுண்டு உற்பத்தி செய்வதில்லை என்ற இந்தியாவின் நிலையைப் பாராட்டினார்.

# ராஜன் பாபுவின் 79வது பிறந்ததினம்
## நாடெங்கும் கொண்டாட்டம்

புதுடில்லி, டிச 4

இந்தியாவின் முதலாவது ஜனாதிபதியான டாக்டர் ராஜேந்திரபிரசாத்தின் 79-வது பிறந்த தினம் நேற்று நாடெங்கும் கொண்டாடப்பட்டது. சுதந்திரப் போராட்டத்தில் அவரது தன்னலமற்ற தியாகம், மக்கள் மீது அவர் கொண்டிருந்த ஆழ்ந்த பற்று ஆகியன பற்றி டில்லியில் நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் பல தலைவர்கள் புகழ்ந்துரைத்தனர்.

உள்நாட்டு மந்திரி திரு. நந்தா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ராஜன்பாபுவுக்கு டில்லியில் உரிய ஞாபகச்சின்னம் நிறுவுவதற்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டது.

பாட்னாவிலுள்ள சதாகத் ஆச்சிரமத்தில் உள்ள ராஜன் பாபு மியூஸியத்தில் அவருடையதும், அவர் மனைவியுடையதும் மார்பளவு உருவச்சிலைகள் திறந்து வைக்கப்பட்டன. இச்சிலைகளை ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் அன்பளிப்புச்செய்தார். விசேஷ பிரார்த்தனைகளும், வழிபாடுகளும் நடைபெற்றன.

# காந்திஜியும், நேருஜியும் மாண்புமிக்க தலைவர்கள்
## போப்பாண்டவர் பாராட்டு

பம்பாய், டிச 4

பாரத மக்கள் தம்மைக் கவர்ந்திருப்பதாயும், மாண்புமிக்க தலைவர்களாக மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு ஆகியோர் விளங்கியதாயும் பாப்பரசர் புகழஞ்சலி செலுத்தினார்.

நேற்று ஜனாதிபதி ராதாகிருஷ்ணனைச் சந்தித்து "லைட் ஆப் தி கோல்டன் ஆமி ஆப் ஏஞ்சல்ஸ்" என்ற அதி உயர்ந்த வத்திக்கான் விருதை அவருக்கு அளித்த போதே பாப்பரசர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஏழைகளுக்கு உதவும் பொருட்டு 50,000 டாலர் செக் ஒன்றையும் அவர் ஜனாதிபதியிடம் அளித்தார்.

ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் ஆர்ச் பிஷப் கிரேசியஸின் இல்லத்தில் பாப்பரசரைச் சந்தித்த போது கீழ்த்திசை தத்துவம் பற்றி தாம் எழுதிய பத்து தொகுதி நூல்களையும், கையெழுத்திட்ட தன் புகைப்படம் ஒன்றையும் மற்றும் பல பொருட்களையும் அன்பளிப்பு செய்தார்.

## சீனாவுக்கு மலேஷியா ஆதரவு

கோலாலம்பூர், டிச 4

சீனாவை ஐ. நா.வில் அனுமதிப்பதை மலேஷியா ஆதரிப்பதாக பிரதமர் துங்கு ரஹ்மான் கூறினார்.

## ஆர்ப்பாட்டத்தில் 50 பேர் காயம்

கராச்சி டிச. 4

கராச்சியில் நேற்று மாணவர்களுக்கும், பொலிசாருக்கும் ஏற்பட்ட கைகலப்பில் 50 பேர் காயமடைந்தனர்.

---

பங்களூர், டிச. 4

தற்போது கேரள கவர்னராக உள்ள திரு. வி. வி. கிரி அடுத்த சில வாரங்களில் மைசூர் கவர்னராகப் பதவி ஏற்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஸ்ரீ கிரி மைசூருக்கு மாற்றலாகிச் செல்வது அவரது உடல்நலத்துக்கு நல்லதெனக்கருதப்படுகிறது.

# லண்டனில் சாஸ்திரி–வில்சன் பேச்சுக்கள் ஆரம்பம்

லண்டன், டிச. 4

நேற்று லண்டன் வந்து சேர்ந்த இந்தியப்பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரியை சாம்ராஜ்ய மந்திரி திரு பொட்டம்லி, புதுடில்லியிலுள்ள பிரிட்டிஷ் தூதர் சர் பால்கோர் பூத், லண்டனிலுள்ள இந்திய தூதர் திரு ஜீவராஜ் மேத்தா ஆகியோர் வரவேற்றனர்.

லண்டன் வந்து சேர்ந்த சிறிது நேரத்தில் திரு. சாஸ்திரி பகிங்ஹாம் அரண்மனையில் மகாராணி எலிஸபெத்தைச் சந்தித்து அவருடன் அரைமணி நேரம் பேசினார். பின் ராஜமாதாவின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான கிளாரன்ஸ் மாளிகைக்குச் சென்று மகாராணியின் தாயாரைச் சந்தித்தார்.

அதன்பின் பிரிட்டிஷ் பிரதமர் வில்சனின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான டௌனிங்தெரு 10 இலக்க இல்லத்தில், திரு. வில்சன் அவருக்கு பகல் விருந்தளித்தார். அப்போது இரு பிரதமர்களும் 75 நிமிட நேரம் சம்பாஷணை நடத்தினார்கள்.

எதிர்கட்சித் தலைவர் சர் அலெக் டக்ளஸ் ஹியூம் அதற்கு முன் திரு. சாஸ்திரியைச் சந்தித்தார். திரு. ஹியூம் பிரதமராய் இருந்தபோது தான் பிரிட்டனுக்கு வருமாறு திரு. சாஸ்திரிக்கு அழைப்பு அனுப்பப்பட்டது.

லண்டன் விமான நிலையத்தில் திரு. நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், இந்தியா-பிரிட்டன் இரு நாடுகளுக்கும் பொதுவான அக்கறையுள்ள விஷயங்களைப் பற்றி பிரிட்டிஷ் தலைவர்களுடன் பேசப்போவதாய் திரு சாஸ்திரி கூறினார்.

நிருபர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் சீனாவின் தற்போதைய கொள்கை மாறும்வரை இந்தியாவுக்கு அது அபாயமாய் விளங்கும் என்றும் அவர் கூறினார்.

பாகிஸ்தானுடன் நல்லுறவு கொள்ளவே இந்தியா விரும்புவதாயும், ஆனால் இவ்விஷயத்தில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்றும் திரு சாஸ்திரி கூறினார்.

"இந்திய-பாகிஸ்தான் உறவில் காஷ்மீர் இரண்டாவது இடமே வகிக்கிறது" என்று கூறிய திரு. சாஸ்திரி அணுகுண்டு தயாரிக்க இந்தியா விரும்பவில்லை எனக் குறிப்பிட்டார்.

நேற்றுமாலை காமன்ஸ் சபையில் திரு சாஸ்திரிக்கு எம். பி.க்கள் தேநீர் விருந்தளித்துக் கௌரவித்தனர்.

திரு. சாஸ்திரி பிரபுக்கள் சபைக்கு விஜயம் செய்து நடவடிக்கைகளைச் சற்று நேரம் கவனித்துக் கொண்டிருந்தார்.


## தமிழ் பேசும் மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த சித்திரக் கலண்டர்




இப்பொழுது விற்பனையாகின்றது!

★ லீலாபஞ்சாங்க சித்திரக் கலண்டர் - ★ டயறிகள்

தமிழ்பேசும் மக்களின் கலண்டர்!

மாணவர்களின் பொக்கிஷம்!

தமிழ் உலகின் ஒரேயொரு சித்திரக்கலண்டர் அது ஒன்றே!




ஆங்கிலம்

டெஸ்க் டயறிகள் — பிளாஸ்டிக் டெஸ்க் டயறிகள்

காரியாலய டெஸ்க் டயறிகள் — காரியாலய பிளாஸ்டிக்

டெஸ்க் டயறிகள் — பொக்கற் டயறிகள்

பிளாஸ்டிக்கட்ட நிகெல் பென்சில்கள் - வெள்ளி நிற பென்சில்கள்

தமிழ்

பஞ்சாங்க சித்திரக் கலண்டர் — பொக்கற் டயறிகள்

பிளாஸ்டிக் டயறிகள் — பேர்ஸ் டயறிகள்





தமிழ் வளர்த்த நாவல் இலக்கிய மேதை அமரர் கல்கி கிருஷ்ணமூர்த்தி

தோற்றம் 9-9-1899

மறைவு 5-12-1954

இன்று அன்னாரின் நினைவு தினம்

சிங்களம்

பஞ்சாங்க சித்திரக் கலண்டர்

பஞ்சாங்க டயறிகள்

பஞ்சாங்க பிளாஸ்டிக் டயறிகள்

பொக்கற் டயறிகள்

பிளாஸ்டிக் டயறிகள் — பேர்ஸ் டயறிகள்



இனும்! கடுதாசிப் பற்றாக்குறையின் காரணமாக குறித்தளவு கலண்டர்— டயறிகளே தயாராகியுள்ளன! நேரத்தோடு ஆடர் செய்து உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுங்கள்.

வி. பி. மூலம் ஆடர் செய்யும் அன்பர்களுக்கு தபாற்செலவு இல்லை!

இல்லங்களிலும் அலுவலகங்களிலும் அவசியம் இருக்க வேண்டியதொரு கலண்டர்

தயாரிப்பாளர்கள்

### லீலா ஸ்டோர்ஸ்,

249 நோறிஸ் வீதி கொழும்பு - 11




யாழ் நகரில் கிடைக்குமிடம்:

### செ. ஆ. செல்லையா அன் கோ.

110 ஆஸ்பத்திரி வீதி, பெரியகடை யாழ்ப்பாணம்.

## 'பார்லிமென்டை கலைக்காதீர்' —ஆர். ஜி.

வட்டடை, வெள்ளி

"மகாசங்கத்தை தமக்கு சாதகமாக வைத்துக்கொண்டு பார்லிமென்டைக் கலைப்பதற்கு குறுகிய அரசியல் நோக்கமுள்ளவர்கள் முயற்சிசெய்கிறார்கள். ஆனால் இப்போது ஒரு பொதுத்தேர்தல் இடம்பெறுமாயின் அது நாட்டுக்கு மிக்க கேட்டை விளைவிக்கும். இது தொண்டமானுக்கு அதிக பலத்தைத் தேடிக்கொடுக்கும்" என தம்பதேனியா எம். பி. திரு. ஆர். ஜி சேனநாயகா இங்கு நடைபெற்ற வைபவமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தற்போதுள்ள சூழ்நிலையில், எந்த சந்தர்ப்பத்திலும் பிரதமர் பார்லிமென்டைக் கலைக்கக்கூடாது என அவர் மேலும் பேசுகையில் கூறினார்.

## புதிய சமாதான நீதிபதி

முள்ளிப்பற்று, வெள்ளி

முள்ளிப்பற்று கிராமசபைத் தலைவர் திரு கனகசபை கனகரத்தினம் சென்ற வியாழக்கிழமை சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. அப்துல்காதர் முன்னிலையில் சமாதான நீதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

"உங்கள் கிரேசன்ஸ்
வேப்பர் கிரீம்
உபயோகிக்கத் தொடங்கியதிலிருந்து, எனது பிள்ளைகள் தடிமன் காரணமாக ஒரு நாளாவது பாடசாலைக்குப் போகத் தவறியதில்லை."
— திருமதி ஏ எச்.




உங்கள் குழந்தையின் நன்மைக்காக எப்பொழுதும் கிரேசன்ஸ் வேப்பர் கிரீமையே கேட்டுவாங்குங்கள் எல்லா மருந்துக் கடைகளிலும், பலசரக்குக் கடைகளிலும் கிடைக்கும்.



சுகவீனத்தின்போது

புத்துணர்ச்சி நல்க வல்லது

பார்லியும்
நிறைந்த
ஓடிக்
கோலன்

காய்ச்சல் குணமுள்ள பருவத்திற்கு இதமளித்து சுக நித்திரையைத் தூண்டுகின்றது.

கைவசம் ஒரு போத்தலை வைத்திருங்கள்.

PAR 5/63 F

## 'நாடகக் கலையின் வளர்ச்சி'

யாழ்ப்பாணம், சனி

"தமிழ்மொழி இனிமையானது, தொன்மை வாய்ந்தது. தமிழை இயல், இசை, நாடகம் என்னும் மூன்று பிரிவுகளாக நாம் மதித்துவருகிறோம். இயல், இசை ஆகிய இரண்டும் குறிப்பாகக் கல்வியறிவுள்ளவர்களால் மட்டுமேதான் பயன்படுத்திக்கொள்ள முடியும். ஆனால் நாடகமோ பாமரனுக்கும் பயன்தரக்கூடியது. சினிமா எம்மிடையே பரவியதன் காரணமாக நாடக வளர்ச்சி பாதிக்கப்பட்டிருப்பது உண்மையே என்றாலும், எமது நாட்டைப் பொறுத்த வரையில் நாடகக்கலை நல்ல முறையில் வளர்ந்துவருகின்றது" என வண்ணார்பண்ணை இளைஞர் மன்றத்தினால் யாழ். நகரமண்டபத்தில் அண்மையில் நடாத்தப்பெற்ற 'இதய தாமம்' என்ற நாடகத்திற்குத் தலைமைவகித்துப் பேசிய மாநகரசபை உறுப்பினர் அட்வக்கேட் எஸ். நாகராஜா குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் நாடகம் வெறும் பொழுதுபோக்குக்காக மட்டும் இருக்காது, மக்களுக்கு நல்ல கருத்துக்களைப் போதிப்பதற்கு உதவவேண்டும் என்றார்.

## 800 மணிநேர நேரு உரை

புதுடில்லி, டிச. 4

நேருஜியின் பதிவுசெய்யப்பட்ட பிரசங்கங்கள் அகில இந்திய ரேடியோ வசம் உள்ளன என்றும், அவற்றைத் தொடர்ச்சியாக இயக்கினால் 800 மணிநேரம் (சுமார் 34 நாட்கள்) பிடிக்குமென்றும் தகவல் ஒலிபரப்பு உதவி மந்திரி பட்டாபிராமன் கூறினார். இந்த ரிக்கார்டுகள் பத்திரமாக அரிய பொக்கிஷமாகப் பாதுகாக்கப்பட்டுவருவதாய் அவர் கூறினார்.

## மாணவரின் நிலை

பருத்தித்துறை, வெள்ளி

சமயபோதனை, பண்பாடு ஆகியனவற்றின் அடிப்படையில் இன்றைய கல்வி போதிக்கப்படாமையால் பரீட்சையில் சித்தியடைந்ததும் மாணவர்கள் தம் விருப்பப்படி நடக்கிறார்கள் என்று பருத்தித்துறை எம் பி திரு க துரைரத்தினம் செம்பியன்பற்றைச் சேர்ந்த தாளையடி றோமன் கத்தோலிக்க பாடசாலை பெற்றார் தினம், பரிசளிப்புவிழா வைபவத்தில் பேசுகையில் கூறினார்.

## இலங்கை தொழிலாளர் கழக மகாநாடு

யாழ்ப்பாணம், வியா.

இலங்கை தொழிலாளர் கழகத்தின் முதலாவது மகாநாடு இம்மாதம் 12-ம், 13-ம் திகதிகளில் அட்டனில் நடைபெறவிருக்கிறது.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம், மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராசதுரை ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

## அரசாங்க பேக்கரி அமைக்க கோரிக்கை

திம்பிரிகசாயா, வெள்ளி

கொழும்பிலும், மற்றும் நகர்ப்பகுதிகளிலும் அரசாங்க பேக்கரிகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கோரும் தீர்மானம் சுதந்திரக் கட்சியின் திம்பிரிகசாயா கிளையின் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கவர்னர்

## பத்மஜா நாயுடு பதவி நீடிக்கும்

கல்கத்தா, டிச. 4

மேற்கு வங்க கவர்னர் ஸ்ரீமதி பத்மஜா நாயுடுவின் பதவிக்காலம் மேலும் இரண்டு ஆண்டுகள் நீடிக்கப்படலாம் எனத் தெரிகிறது. அவருடைய பதவிக்காலம் பெப்ரவரியில் முடிகிறது. ஸ்ரீமதி நாயுடு சென்ற 7 ஆண்டுகளாக மேற்கு வங்க கவர்னராக இருந்துவருகிறார்.

## ஐ. நா. வில் ஒத்திவைப்பு

நியூயோர்க், டிச. 4

ஐ. நா. சமாதான பணிக்குப் ரஷ்யா பங்குப்பணம் செலுத்தாமலிருப்பதுபற்றிய விவாதம் பொதுச்சபையில் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. ஐ. நா. வுக்கு 13 கோடி டாலர் பணம் பற்றாக்குறை இருக்கிறது. இதற்காக ஒரு நிதியை ஏற்படுத்த ஆசிய-ஆபிரிக்க நாடுகள் முயன்றுவருகின்றன.

## யுத்த காலத்தில் சர்ச்சில் பிழைத்தார்

ஜோகானஸ்பேர்க், டிச. 4

90 வயதான சர்ச்சிலுக்கு 65 ஆண்டுகளுக்கு முன் தென்னாபிரிக்காவில் உயிர் துறக்கவிருந்தார். தப்பியோடும் பிரிட்டிஷ்காரரைப் பின்பக்கம் சுடலாகாதென போர்த் தளபதி ஒருவர் உத்தரவிட்டிருந்ததால் சர்ச்சில் உயிர் தப்பினார். சர்ச்சிலைப் பிடிப்பதில் அச்சமயம் ஈடுபட்டிருந்த ஒருவர் இச்சம்பவத்தை விவரித்தார்.

"அவரை (சர்ச்சிலை) எளிதில் நாங்கள் சுட்டுத்தள்ளியிருக்கமுடியும் ஆனால் எதிரியின் முதுகுப்புறத்தில் சுடக்கூடாதென ஜெனரல் ஜோபர்ட் உத்தரவிட்டிருந்தார்" எனப் பிரஸ்தாப நபர் கூறினார்.

ஸ்டான்லிவில், டிச. 4

காங்கோவின் மூன்றில் இரு பகுதி தங்கள்வசம் இருப்பதாகப் புரட்சிக்காரத் தலைவர் அறிவித்திருக்கிறார்.

## ரங்கூனில் சென்யீ

ரங்கூன், டிச. 4

சீன வெளிநாட்டு மந்திரி திரு சென் யீ, இந்தோனேஷியாவிலிருந்து தாயகம் திரும்பும் வழியில் நேற்று ரங்கூன் வந்துசேர்ந்தார். பர்மாவில் அவர் சிலதினங்கள் தங்குவார்.

## வில்சன்

லண்டன், டிச. 4

அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சனுடன் தாம் பலகோக்கு நேட்டோ படைபற்றி விவாதிக்க போவதாய் பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் கூறினார்.

பாகிஸ்தான்

## 2 விக்கெட்டுக்கு 18 ரன்கள்

பிரிஸ்பேன், டிச. 4

ஆஸ்திரேலியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே இங்கு நடைபெறும் கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் 2 விக்கெட் நஷ்டத்திற்கு 18 ரன்கள் எடுத்தது.

எனக்கு
மிகவும்
பிரியமானது




CEYLON CHOCOLATES LTD

கன்டொஸ்

உயர்ந்த ரகச் சொக்கலேற்று




RAVI-COL-115

Sole Distributors:
SHAW WALLACE & HEDGES Ltd.
Colombo 3.

# வானொலி நிகழ்ச்சிகள்

## கொழும்பு

### சனி 5-12-64

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-50 சைவசற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க சற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராம சஞ்சிகை, 6-45 செய்திச் சுருள், 7-00 கே. கே. அந்தோனி—பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேச்சு — வித்துவான் எஸ். பூபாலபிள்ளை, 9-30 செல்லமணி காரானசிங்கம்- வயலின், 10-00 நேயர் விருப்பம்.

### ஞாயிறு 6-12-64

காலை 6-45 பாமாலை, 6 50 சைவசற்சிந்தனை. 6-55 கத்தோலிக்க சற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 இசைப் பயிற்சி 8-00 பக்திப் பாடல்கள், 8-15 தமிழ் மூலம் சிங்களம் 8-30 ஞானாஞ்சலி, 9-00 முஸ்லிம் ஞாயிறு பாடசாலை, 9-30 திரை இசை.

பகல் 11-30 சிறுவர் மலர், 12-15 நேயர் விருப்பம், 1-00 மாதர் நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 கமலாதேவி நடேசன், 5-45 திரை இசை

இரவு 6-10 வாத்திய இசை, 6-45 நேயர் கடிதம், 7-00 தங்கராணி கனகசபை—பாட்டு, 7-30 'ராட்டை பரிசு' நாடகம் சு. வே. எழுதியது. 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 மாதர் விருப்பம், 9-45 தேர்ந்த இசை, 10-00 நிலைய ஒலிப்பதிவுகள்.

## திருச்சி

### சனி 5-12-64

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 வாத்திய இசை, 6-55 அருள் வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 வயலின்

பகல் 1-00 பின்னேக்கவி அமுது, 1-20 கதம்பம், 1-50 வாத்திய இசை, 2-10 வயலின்

மாலை 5-15 திரைப்பட இசை, 5-45 வாத்திய இசை, 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7-30 நாடகம், 8 45 மெல்லிசை, 9-15 இசைக்கோவை. 9 30 அகில பாரத சங்கீத நிகழ்ச்சி

### ஞாயிறு 6-12-64

காலை 6-30 மங்கள இசை, 6-50 வாத்திய இசை, 6-55 அருள் வாக்கு. 7-00 துதிப் பாடல்கள், 7 30 காலையர் எம். எஸ். சண்முகம்—பாட்டு, 8-15 கோபாலரத்தினம்-பாட்டு.

பகல் 12-00 கீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி கதம்ப நிகழ்ச்சி, 1-00 மணிமலர், 1-50 வாத்திய இசை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 எச். சங்கரபாகவதர்-பாட்டு.

மாலை 5-15 எம். எஸ். சண்முகசுந்தரம்—பாட்டு, 5-45 இசைப் பயிற்சி

இரவு 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7 30 பேச்சு, 7-45 புல்லாங்குழல்; 8-30 மெல்லிசை, 8-45 தபால் பெட்டி, 9-30 சங்கீத உபந்நியாசம்-

---

# கந்தரோடை வெற்றிபெற்றது

யாழ்ப்பாணம், சனி

கந்தரோடை சனசமூக நிலையக் கோஷ்டிக்கும் மாகியப்பிட்டி ஸ்போட்ஸ் கழகத்திற்கும் இடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான விளையாட்டுப் போட்டியில் கந்தரோடைக் கோஷ்டி 6—0 கோல்களால் அமோக வெற்றியீட்டியது.

திரு. வி. வை. மகாலிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

# "நல்ல கல்வி அவசியம்"

புதுக்குடியிருப்பு, வெள்ளி

பல சைவப் பாடசாலைகளை ஸ்தாபித்து செந்தமிழும் சைவமும் வளர்த்த பெரியார் திரு. சு. இராசரத்தினம் இன்று இக் கட்டடத்தைத் திறந்து வைத்தமையைக் காண நான் பெருமகிழ்வடைகிறேன். இயற்கை ஆற்றலும் விவேகமும் வாய்ந்த இப் பகுதிக் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு இம் மகாவித்தியாலயம் ஒரு வரப்பிரசாதமாகும் ஒரு வருட காலத்துள் இவ் வித்தியாலயக் கல்வி வளர்ச்சியைக் காண நான் மிக மகிழ்வடைகிறேன். தம் குழந்தைகளின் கல்விவளர்ச்சியில் பேரவல் கொண்டு இவ் வித்தியாலய வளர்ச்சிக்கு ஆவன செய்து வரும் இப்பகுதி மக்களின் ஒத்துழைப்பும் இவ் வித்தியாலய வளர்ச்சிக் காரணமாகும்.

புதுக்குடியிருப்பு மகா வித்தியாலய அதிபர் திரு. கு. வி. செல்லத்துரையால் கல்லூரிக் கொடியேற்றி ஆரம்பித்து வைக்கப்பட்ட புதிய கட்டட திறப்புவிழா, விஞ்ஞான கைப்பணிக் காட்சிவிழா என்பவற்றிற்குத் தலைமை தாங்கிப் பேசிய வவுனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பரிபாலன மண்டபத்தைத் திறவைத்துப் பேசிய யாழ்ப்பாணம் சைவவித்தியாவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. சு. இராசரத்தினம் பேசுகையில் கூறியதாவது:

இச் சபையை 1955-ம் ஆண்டில் நான் ஆரம்பிக்கும் பொழுதே இவ்வூர் மக்களின் ஒத்துழைப்பால் இப் பாடசாலை முன்னேற்றமடையுமென அப்பொழுதே நான் நினைத்தேன் மாணவர்கள் நல்ல கல்வியை பெறவேண்டும். இங்கு நல்ல கல்வி வழங்கப்படுகிறதென்பதற்கு அடையாளமாக இங்கு நடைபெறும் விஞ்ஞான உபகரணக் காட்சி அமைந்திருக்கிறது. இவ்வித்தியாலயத்திற்கு ஒரு விடுதிச்சாலை மிக அவசியம் எதிர்காலத்தில் ஒரு பெரிய மத்திய மகாவித்தியாலயமாக இது உயர்வடையும் என நான் நம்புகின்றேன்.'

வித்தியாதரிசி திரு. வெ. கந்தசாமி விஞ்ஞான-கைப்பணி பொருட்காட்சியைத் திறந்து வைத்துப் பேசுகையில் வித்தியாலயத்தின் முன்னேற்றத்தைக் கண்டு மகிழ்ச்சியடைபவர்களில் நானும் ஒருவன் என்றார். ஒழுங்குமுறையில் திட்டமிடுக்கடமையாற்றி மாணவர்களின் இயற்கையாற்றல் மிகச் சிறந்த முறையில் செயற்படுத்தப்பட்டிருப்பதை இப் பொருட்காட்சி நமக்குக் காண்பிக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து சிரமதானச்சபைச்செயலாளர் திரு. ச. சண்முகம் தமது அறிக்கையை வாசித்தார். பெற்றோர்-ஆசிரியர் சங்கக்காரியதரிசி திரு. கா. மகாலிங்கசிவம் நன்றியுரை கூறினார்.

# மாணவருக்குவெற்றி

உடுப்பிட்டி, வெள்ளி

தேவரையாளி இந்துக் கல்லூரி ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் மாணவர் 5 கோல்களும் ஆசிரியர்கள் 2 கோல்களும் பெற்றனர். ஆசிரியர் கோஷ்டிக்கு திரு. சி. திரவியமும் மாணவர் குழுவிற்கு செல்வன் சி. பேரின்பநாதனும் தலைமை வகித்தனர். திரு. வ. தம்பையா மத்தியஸ்தம் வகித்தார்.

# கூப்பனின்றி துணி

கொழும்பு, வெள்ளி

தற்போது கூப்பனுக்கு வழங்கப்பட்டுவரும் துணி அடுத்த வாரத்திலிருந்து கூப்பனின்றி வழங்கப்படவிருக்கிறது.

போதிய துணி கையிருப்பு இருப்பதால் இவ்வாறு கூப்பனின்றி வழங்கக் கூடியதாக இருப்பதாக உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக விநியோக அமைச்சைசேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

# இறக்குமதித்தடை நீங்கலாம்

கொழும்பு, வெள்ளி

சில அத்தியாவசிய உணவுப் பொருள்களின் இறக்குமதித் தடை நீக்கப்படலாமென அறியப்படுகிறது.

இதுபற்றி உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக விநியோக மந்திரி திரு. டி. பி. இலங்கரத்தின ஆலோசனை செய்து வருகின்றார்.

உள்ளூரில் உற்பத்தியாகும் இவ்வித பொருட்கள் உள்ளூர் தேவைக்குப் போதியவையாக இல்லாதிருப்பதாலேயே இவ்விதம் யோசனை செய்யப்பட்டு வருவதாக அறியப்படுகிறது.

# கள்ளக்கடத்தல் முயற்சி

கொழும்பு, வெள்ளி,

இலங்கையிலிருந்து நாடு கடத்தப்பட்ட பாகிஸ்தான் பிரஜை ஒருவர் சுமார் 10,000 ரூபா பெறுமதியான கைக்கடியாரங்கள், வேறு நகைகள் ஆகியவற்றைக் கள்ளக் கடத்தல் செய்ய முயன்றதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் பிரயாணம் செய்து கொண்டிருந்த 'ரஸ்டம்' என்ற கப்பல் இதன் காரணமாக சுமார் மூன்று மணிநேரம் தாமதப்படுத்தப்பட்டது.


எல்லோருமே தமக்கு வேண்டிய மலர்களுக்கும், மரக்கறி விதைகளுக்கும் எஸ். ஏ. பெர்னண்டோ விடமே ஆடர்செய்கிறார்கள்.

ஏன் தெரியுமா........?

........ அவர்கள் நாடு பூராவும் உள்ள மக்களுக்கு கடந்த 23 ஆண்டு காலத்திற்கு மேலாக நறுமணம் கமழும் புது மலர்களும், விதம் விதமான மரக்கறி விதைகளும் விநியோகம் செய்துவருகிறார்கள்.

வேறு எந்த ஸ்தாபனமும் தோற்கடித்துவிட முடியாதவாறு எஸ். ஏ. பெர்னண்டோ ஸ்தாபனத்தார் தமது நற்பெயரை கட்டிக்காத்து வருகிறார்கள். இந்த நற்பெயரே அவர்களுக்கு ஆடர்களைக் குவிக்கின்றன.

நேரடியாகவேனும் கடித மூலமாகவேனும் தொடர்புகொள்ளவும்.

எஸ். ஏ. பெர்னண்டோ

த பெ எண்: 16

பழைய பஸார், நுவரெலியா.

தொலைபேசி எண் 283, தந்தி: பாத்திமா.



School of Technology, Jaffna

1965 - 66 Courses.

Candidates with J S C

Electrical Installation Work / Motor Mechanism — Theory and Practical, One Year Courses

Candidates with G C E Certificate with passes in Pure Maths, Physics and English:-

Electrical Engineering Practice (Preliminary) — City & Guilds London, Examinations.

Candidates with G. C E Certificate with Pure Maths., English and preferably with Drawing:-

Authorised Draughtsmen - Surveyor General's Exam., May 1966

Civil Engineering Drawing / Building Construction — School Certificate.

Applications close on 5-1-65 Courses commence on Jan 18 1965 Forms and other particulars can be had from "Citadel" Chundikuli, Jaffna

30-11-54 . Director.


# கேள்வி அறிவித்தல்

1964ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் திகதி நண்பகல் 12 மணிவரை கீழ்க்கண்ட ஏற்றுமதிகளுக்கு எங்களால் ஏற்றுக்கொள்ளப்படும்,

கேள்விகள் கீழ்க்கண்ட எல்லாவற்றிற்கும் அல்லது ஒன்றுக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்டதற்காக இருக்கலாம்

கேள்வி விண்ணப்பப் பிரதி ஒன்றுக்கு ரூ. 1-ம், கேள்வி வைப்புப் பணமாக கேள்வி ஒவ்வொன்றிற்கும் ரூ 100-ம் கட்டி 1964ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ம் திகதி நண்பகல் 12 மணிவரை கேள்வி விண்ணப்ப பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி வைப்புப் பணம் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டபின் திருப்பிக்கொடுக்கப்படும்.

ஏற்றுமதி வேலை விபரங்கள்

1. கொழும்பு 'மன்னிங் மார்க்கெட்', அரசினர் கிட்டங்கிகள், கூமொவி இலாகா கிட்டங்கிகள் ஆகியவற்றிலிருந்து லொறி மூலம் யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசக் கிட்டங்கிகளுக்கு சீனி ஏற்றுமதி செய்தல்.
2. காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையிலிருந்து லொறிகள் மூலம் யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசக் கிட்டங்கிகளுக்கு சீமெந்து ஏற்றுமதி செய்தல்.
3. காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையிலிருந்து லொறிகள் மூலம், மாவட்ட காரியாதிகாரி பகுதி (யாழ்ப்பாணப் பிரிவு) யிலுள்ள மேற்படி சமாசக் கிளை ஸ்தாபனங்களுக்கும், கூட்டுறவு பண்டசாலைகளுக்கும் சீமெந்து ஏற்றுமதி செய்தல்.

மேலும் விபரங்கள் கீழ்க்கையொப்பமிடுபவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நா. இ. சந்திரன்,
காரியதரிசி

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வரையறுக்கப்பட்டது)
74/3, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம் 1224

# சந்தலூசியா ஆலய வருடவிழா

மன்னார், வெள்ளி

மன்னாரிலிருந்து இரண்டு மைல் தூரத்தில் இருக்கும் பள்ளிமுனை சந்தலூசியா ஆலய வருடாந்தவிழா ஆரம்பமாகியுள்ளது. 12-ந் திகதி மாலை வேஸ்பர் ஆராதனையும், 13-ந் திகதி காலை பாடற்பூசையும், சுற்றுப்பிரகாரத்துடனும், திருவிழா முடிவுறும். இவைகளை பெரும் ஆராதனைகளை பள்ளிமுனைக்கட்டளைக் குருவர் நடத்துகிறார்.

## வரி விளம்பரம்

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலைக் இறும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 1250 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 1050, வைத்தியர் பரிபூரணநாதர் கரையாபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்

### விற்பனைக்கு

தெல்லிப்பழை விமன்காமம் றெயில் ரோட்டிற்குருகாமையிலிருக்கும் திரு செல்லப்பாவின் பிள்ளைகளின் வீடும் 7 1/2 பரப்பு வளவும் தனிக் கிணற்றுடன் விற்பனைக்கிருக்கிறது. வாங்கவிரும்புவோர் திரு சி. செல்லையா, லக்ஷ்மிபதி, ஆனைக்கோட்டை என்ற விலாசத்திற்குத் தொடர்பு கொள்ளவும். 1172

### இடமாற்றம்

பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியில் கற்பிக்கும் பயிற்றப்பட்ட முதலாம் தராதரத் தமிழ் ஆசிரியர், யாழ்ப்பாணத்திலுள்ள அதே தரமுள்ள ஓர் ஆசிரியரின் இடத்திற்கு ஒத்துமாற விரும்புகிறார். விபரங்களுக்கு: யோ. இரத்தினராசா, புங்குடுதீவு-1.

1178

### வாடகைக்கு

கிளிநொச்சி பசாரில் உள்ள 158 ஆம் கட்டைப் பகுதியில் புதிதாகக் கட்டப்பெற்ற இரு கடைகள் தை 1965 தொடக்கம் வாடகைக்குக் கொடுக்கப்படும். ஒவ்வோர் கடையும் 32 அடி நீளமும், 14 அடி அகலமும் கொண்டவை.

விபரங்களுக்கு சிந்தாமணி சொக்கநாதன், மங்கிளா ஒழுங்கை, மல்லாகம் 1179

# சந்தேக நபர் கைது

சிலிநொச்சி, சனி

பதினெட்டு வயதான சின்னராசா மனோன்சரஸ்வதி என்ற இளம் பெண் மரணமானது சம்பந்தமாகத் தேடப்பட்டு வந்த மேற்படி இளம்பெண்ணின் மாமனாரான சோமசுந்தரம் என்பவர் சென்ற வியாழக்கிழமை நள்ளிரவு பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

இந்த நபர் தமது சொந்த மருமகளைக் கெடுக்க முயன்றாரெனக் குற்றம்சாட்டப்பட்டிருந்தது. திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. மு. யோகலிங்கம் இவரைக் கைது செய்யுமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டிருந்தார்.


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

